# மதுரமுரளி

Rs. 5/-

Registered as Newspaper in India R. No. 62828 / 95

Regd. No. TN / PMG (CCR) / 521 / 03 - 05

Licensed to Post without prepayment WPP No. 319

வேணு : 8 | ஜுலை - 2003 | கானம் : 12




தேதி : 12.06.2003 இடம் : மஹாஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம், பெங்களூர்.



ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, GKR Charities, Mumbai & Chennai நிறுவனர்
ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்களுக்கு
"தர்மாத்மா" என்ற விருதை கொடுத்து கௌரவித்தார்கள்


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

Website : www.madhuramurali.org ; e-mail : contact@madhuramurali.org


ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




வேணு : 8 | ஜுலை - 2003 | கானம் : 12

www.madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

மஹாஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம் 4.6.2003 முதல் 15.6.2003 வரை

இடம் : கனரா யூனியன், மல்லேஸ்வரம், பெங்களூர்.





ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, மஹாஸாம்ராஜ்ய பட்டாபிஷேக வைபவத்தை குத்துவிளக்கேற்றி துவக்கி வைக்கிறார்கள்.



பாராயணத்தில் பாகவதோத்தமர்கள்



பாராயணத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி



ஸ்ரீ பாதுகா பட்டாபிஷேகம்



மஹாஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம்



தஞ்சாவூர் ஸ்ரீ வரசக்தி விநாயகர் திருக்கோவிலில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாஸம்

தேதி : 27.5.2003 முதல் 1.6.2003 வரை

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் நிகழ்ச்சி விபரம்

8.7.2003 முதல்
12.7.2003 வரை
இரவு : 7.00 – 9.00

"பக்த சரித்திரங்கள்" உபன்யாஸம்
இடம் : ஸ்ரீ குருவாயூரப்பன் திருக்கோயில்
மஹாலிங்கபுரம், சென்னை.

9.7.2003
காலை : 10.45 – 12.00

பிள்ளைவாசல், ஸ்ரீ ஆருடையார்கோவில்
யோகீஸ்வரர் ஸ்ரீ ராமக்ருஷ்ண ப்ரம்மேந்திர
ஸ்வாமிகள் அதிஷ்டான அஷ்டபந்தன கும்பாபிஷேகம்
ஸ்ரீ ஸ்வாமிஜியின் முன்னிலையில் நடைபெறும்.

13.7.2003

குரு பூர்ணிமா, இடம் : மதுராபுரி ஆஸ்ரமம்

16.7.2003
இரவு : 7.00 – 8.30

ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை
இடம் : ஸ்ரீ சோழீஸ்வரர் ஸ்வாமி திருக்கோயில்
வெள்ளக்கோவில், ஈரோடு மாவட்டம்.

19.7.2003
இரவு : 7.00 – 9.00

ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை
இடம் : ஸ்ரீ மாயம்மா ஸமாஜ்
சிவகாசி.

20.7.2003
மாலை : 5.45 – 7.15

பகவான் ஸ்ரீ ரமணரைப் பற்றி
ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாஸம்
இடம் : ஸ்ரீ ரமணாலயம்,
எண். 25, அழகுத்தான்குளம் ரோடு,
ராஜபாளையம் – 626 117.

21.7.2003 முதல்
23.7.2003 வரை

மயிலாடுதுறை, பழைய கூடலூர்
ஸ்ரீ காமாக்ஷி அம்பிகா ஸமேத
ஸ்ரீ ஏகாம்ரேஸ்வரர் திருக்கோயில்
இரண்டாம் ஆண்டு திருதின உத்ஸவத்தில்
ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொள்கிறார்கள்.

25.7.2003 முதல்
31.7.2003 வரை
இரவு : 7.00 – 9.00

ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை
இடம் : ஸ்ரீ சங்கரமடம்,
சேலம்.

9.8.2003 முதல்
14.8.2003 வரை
இரவு : 7.00 – 9.00

ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாஸம்
இடம் : ஸ்ரீ அனந்த பத்மநாப ஸ்வாமி
திருக்கோயில், 2-வது பிரதான சாலை,
காந்தி நகர், சென்னை – 600 020.

சுபம்

| இடம் | ஸ்ரீ ஸ்வாமிஜியின் தரிசன நேரம் |
|---|---|
| மதுராபுரி ஆஸ்ரமம் | காலை 9.00 – 11.00 மணி வரை<br>மாலை 4.00 – 6.00 மணி வரை |
| பிரேமிக பவனம் சென்னை | காலை 8.00 – 10.00 மணி வரை<br>மாலை 5.30 – 8.30 மணி வரை |

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

**(தெய்வீக மாதப் பத்திரிகை)**

வேணு : 8 ஜுலை 2003 கானம் : 12

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 92 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 5 |
| 4. | வேத கதைகள் - 73 | 7 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 63 | 9 |
| 6. | ஸனாதனப் புதிர் - பகுதி - 27 | 13 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 67 | 15 |
| 8. | மாலே மணிவண்ணா - 10 | 17 |
| 9. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 16 (தொடர்ச்சி) | 22 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 94 | 25 |
| 11. | செய்திகள் | 28 |
| 12. | பக்தர்களின் கவனத்திற்கு ! | 31 |


यस्य श्रीहनुमाननुग्रहबलात्तीर्णाम्बुधिर्लीलया
लङ्कां प्राप्य निशाम्य रामदयितां भङ्क्त्वा वनं राक्षसान् ।
अक्षादीन्विनिहत्य वीक्ष्य दशकं दग्ध्वा पुरीं तां पुन:
तीर्णाब्धि: कपिभिर्युतो यमनमत्तं रामचन्द्रं भजे ॥

எவரின் தயையின் வலிமையினால் ஸ்ரீ ஹநுமான் யாதொரு களைப்புமில்லாமல் ஸமுத்ரத்தைத் தாண்டி, ஸ்ரீராமனின் அன்பு ஸீதையைக் கண்டு. அஸோகவனத்தை சேதப்படுத்தி, அக்ஷகுமாரன் முதலிய அரக்கர்களை கொன்று, ராவணனைக் கண்டு, இலங்கையை எரித்து மறுபடியும் கடலைத் தாண்டி மஹேந்த்ர மலையிலிருக்கும் குரங்குகளுடன் ஸ்ரீராமசந்த்ரனுக்கு சாஷ்டாங்கமாய் வணங்கினாரோ, அப்படிப்பட்ட ஸ்ரீராமசந்த்ரனை வணங்குகிறேன்.

**— ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் அருளிய "ஏகஸ்லோகி" ஸுந்தரகாண்டம்**

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : திலங் தாளம் : ஆதி

*பல்லவி*

***விட்டல நாம ஸ்மரணம்***
***ஸர்வ அஜ்ஞான நாசகம்***

*அனுபல்லவி*

***விட்டல விட்டல பாண்டுரங்க***
***விட்டல விட்டல பாண்டுரங்க***

*சரணங்கள்*

***பீமாநதீதீரம்***
***ஸர்வபாபவிமோக்ஷணம் (விட்டல)***

***சந்த்ரபாகாநதீ ஸ்நாநம்***
***ஸர்வதுக்க நிவாரணம் (விட்டல)***

***பாண்டுரங்க தரிசனம்***
***ஸர்வ பாப விமோசனம் (விட்டல)***

***பண்டரீச க்ஷேத்ரவாஸ:***
***ஸர்வ ஜன்ம புண்யலாப: (விட்டல)***

***விட்டலபக்த்யா ஏவ***
***ஸர்வ நிஶ்சய வைகுண்ட ப்ராப்தி: (விட்டல)***

*நாமாவளி*

***விட்டல விட்டல பாண்டுரங்க***
***விட்டல விட்டல பாண்டுரங்க***

ஸ்ரீமத் பாகவதத்தை நூற்றியெட்டு முறை பாராயணம் செய்வதற்கு ''சதக்ரது'' என்று பெயர். நூற்று எட்டு பாகவதோத்தமர்களை கொண்டு ஒரே ஸமயத்தில் பாராயணம் செய்ய சொல்வதும் உண்டு. இந்த ''ஸப்தாஹ சதக்ரது'' காஞ்சி ஸ்ரீ மஹாபெரியவாளின் ஜயந்தி மஹோத்ஸவத்தின்பொழுது ஒருமுறை பெங்களூரில் நடைபெற்றது. அதற்குப் பிறகு குருவாயூரிலே இந்த ஸப்தாஹ சதக்ரது நடைபெற்றது. அதில் கலந்துகொண்டவர்கள் இன்றும் எப்பொழுதும் அதைப்பற்றியே பேசுவார்கள். அவ்வளவு விமர்சையாகவும், பக்தி சிரத்தையுடனும் அந்த ஸப்தாஹ சதக்ரது நடைபெற்றது. அதை அடுத்து ப்ருந்தாவனத்தில் ஒரு ஸப்தாஹ சதக்ரது நடைபெற்றது.

இந்த வருடம் ஸ்ரீ மஹாபெரியவாளின் ஜயந்தியை முன்னிட்டு ஒரு ''மஹாஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம்'' நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இருபத்துநான்கு முறை ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை பாராயணம் செய்தால் அது ''ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம்''. நூற்று இருபத்து நான்கு முறை பாராயணம் செய்தால் ''மஹாஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம்''. இந்த முறை நூற்று இருபத்து நான்கு பாகவதோத்தமர்களை கொண்டு ஜூன் நான்காம் தேதி முதல் ஆரம்பித்து பதிமூன்றாம் தேதி வரை இந்த மஹாஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம் பெங்களூர் மல்லேஸ்வரத்தில் நடைபெற்றது.

ஜூன் நான்காம் தேதி மாலை ஸ்ரீ ஸ்வாமிஜி குத்துவிளக்கு ஏற்றி வைத்து இந்த வைபவத்தை ஆரம்பித்து வைத்து பேசினார்கள். அப்பொழுது தனக்கு இதுபோன்று ஒருமுறை மஹாஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம் ராமேஸ்வரத்தில் நடத்தவேண்டும் என்று ஆசையாக உள்ளது என்றும், அது விரைவில் நடக்கும் என்றும் சொன்னார்கள். பல ஊர்களில் இருந்து பாகவதோத்தமர்களும் பக்தர்களும் ஆயிரக்கணக்கில் கூடியிருந்தார்கள். தினமும் காலையில் ப்ரபோதனம், ஹோமம், பாராயணம், பூஜை, சதுர்வேத பாராயணம் மாலையில் உபன்யாஸம், ஸஹஸ்ரநாம பாராயணம், பிரபல வித்வான்களின்

ஸங்கீத கச்சேரி, இரவு திவ்யநாம ஸங்கீர்த்தனம், டோலோத்ஸவம் என்றபடி நடைபெற்றது.

ஆரம்ப தினத்தன்றும், பாதுகா பட்டாபிஷேகத்தன்றும் மழை பெய்தது. மஹாஸாம்ராஜ்ய பட்டாபிஷேகத்தின் நடுவிலே பல கோதானங்கள், ஸ்வர்ண தானங்கள் எல்லாம் செய்யப்பட்டன. தம்பதி பூஜை, வடுக பூஜை, கன்யா பூஜைகள் எல்லாம் நடைபெற்றன.

நம்முடைய ஸத்ஸங்கத்தை சேர்ந்த ஸ்ரீமான் G.K. ராமமூர்த்தி அவர்களுக்கு 'தர்மாத்மா' என்ற விருது கொடுத்து நம் ஸ்வாமிஜி அவரை கௌரவித்தார்கள். அவர் இன்று பல துறைகளிலும் செய்து வரும் தர்மத்தை பற்றி அன்று எடுத்து சொல்லி அவருடைய ஸேவையானது பாராட்டப்பட்டது.

கடைசி நாளன்று கோலாகலமான வைபவத்துடன் யானை பிளிற, மங்கள வாத்யங்கள் முழங்க, வேத கோஷத்தினிடையே ஸ்ரீராமபிரானுக்கு கனகாபிஷேகமும், மஹாஸாம்ராஜ்ய பட்டாபிஷேகமும் நடைபெற்றது கண்கொள்ளா காட்சியாக இருந்தது. அன்று ஆயிரம் பேருக்கு குறையாமல் புடவை கொடுக்கப்பட்டது. மாலையில் ராமாயணத்தில் உள்ள ஸூக்ஷ்மமான தர்மங்களை பற்றி ஸ்ரீ ஸ்வாமிஜி உரையாற்றினார்கள். மாலையில் வாணவேடிக்கைகள், கரகாட்டம் போன்ற கிராமிய கலைஞர்களுடன் பெங்களூரில் உள்ள முக்கியமான வீதிகளில் ஊர்வலம் நடைபெற்றது. பதினான்கு, பதினைந்து தேதிகளில் இந்தியாவில் உள்ள அனைத்து முக்கியமான பாகவதர்கள் கலந்துகொண்ட பாகவத மேளா நடைபெற்றது. சீதா கல்யாண வைபவமும் நடைபெற்றது. ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கலந்துகொண்டார்கள். இடைவிடாமல் இதில் நாமஸங்கீர்த்தனம் செய்யப்பட்டது. மாலையில் ஹநுமார் உத்ஸவத்துடன் மஹாஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம் பூர்த்தியடைந்தது.

பெங்களூரை சேர்ந்த ஸ்ரீமான் மூர்த்திதான் இத்தனை ஏற்பாட்டிற்கும் காரணம். கடைசி நாளன்று அவருடைய தன்னலமற்ற பக்தி ஸேவையை பாராட்டி அவர் கௌரவிக்கப்பட்டார்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : தொண்டரடிப்பொடியாழ்வார் சரித்திரத்தில் பகவான் ஸ்ரீ ரங்கநாதரே ஆழ்வாரின் பொருட்டு தேவதேவி என்ற தாஸியின் வீட்டிற்குத் தூது சென்றார் என்றுள்ளதே?*

பதில் : இதுபோல், சுந்தரமூர்த்தி நாயனாருடைய சரித்திரத்திலும் சுந்தரருக்காக பரவை நாச்சியார் என்பவர் வீட்டிற்கு இறைவன் தூது சென்றார் என்றுள்ளது. பகவானால் அங்கீகரிக்கப்பட்ட காமம் இது. இதுபோல், துர்வாஸருடைய கோபமும், நாரதருடைய கலகமும் பகவானால் அங்கீகரிக்கப்பட்டவை. இவையெல்லாம் உலகத்தின் க்ஷேமத்தின் பொருட்டும், உலகத்திற்கு ஒரு நீதி புகட்டும் பொருட்டும் செய்த லீலைகள்.

*கேள்வி : வஸுதேவருக்கும், தேவகிக்கும் பிறந்த முதல் குழந்தையை கம்ஸனே கொல்லாமல் விட்டுவிட்டபொழுது, நாரதர் கம்ஸனிடம் கலகம் செய்து அந்த குழந்தையை கொல்லத் தூண்டுவானேன்?*

பதில் : உலகத்தில் எப்பொழுது அதர்மம் தலை தூக்குகின்றதோ, அக்ரமங்கள் பெருகுகின்றனவோ, அப்பொழுதுதான் பகவானுடைய அவதாரம் ஏற்படும். கம்ஸன் இதுபோன்ற அக்ரமங்களைச் செய்தால்தான் பகவானுக்கு கோபம் ஏற்பட்டு சீக்கிரம் வருவான் என்றே நாரதர் இப்படி கலகம் செய்தார். அவருடைய கலகமும் நன்மையில் முடிந்தது.

*கேள்வி : கடவுள் அருள் இருந்தால்தான் உணவு கிடைக்கும் என்றால், நான் உழைக்காமல் இருந்தால் உணவு கிடைக்குமா?*

பதில் : உழைத்தால்தான் உணவு கிடைக்கும் என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், அப்படி கிடைத்த உணவை விழுங்கவேண்டும் என்றாலோ, அது உள்ளே போய் செரிக்க வேண்டும் என்றாலோ கடவுள் அருள் இருந்தால்தான் நடக்கும். ஏனென்றால் ஆத்மா, கடவுள், குரு மூன்றும் ஒன்றுதான். அத்தகைய ஆத்ம சைதன்யம்

உள்ளே இருப்பதால்தான் ஒருவர் பார்க்கின்றார்; நடக்கின்றார்; கேட்கின்றார்; விழுங்குகின்றார்; அழுகின்றார்; சிரிக்கின்றார்; உண்ட உணவும் செரிக்கின்றது.

*கேள்வி : தனிமையில் இருப்பது என்பது ஒருவருடைய ஆன்மீக முன்னேற்றத்திற்கு உதவும் என்று சொல்லப்பட்டுள்ளதே! எனது நண்பர் ஒருவர், வீட்டில் எப்பொழுதும் கதவை சாத்திக்கொண்டு தன்னுடைய அறையிலேயே தனியாக இருப்பார். வீட்டில் உள்ள மற்றவர்களுடன் பேசமாட்டார். அவருக்கு ஆன்மீக முன்னேற்றம் சுலபத்தில் ஏற்படுமா?*

பதில்கள் : ஒருவர் தனிமையில் இருக்கவேண்டுமென்பதற்காக, ஒரு அறைக்குள்ளேயே இருந்துகொண்டு, நாளிதழ்களை படித்துக் கொண்டும், வானொலியைக் கேட்டுக்கொண்டும், தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டும் இருப்பாரானால் அது தனிமையாகிவிடாது. தனிமை என்பது எந்தவிதமான காரியங்களிலும் ஈடுபடாமல் மனதை ஒருமுகப்படுத்துவதாகும். அப்படியிருந்துகொண்டு செய்யும் சாதனைகளாலேயே ஆன்மீக முன்னேற்றம் ஏற்படும். அப்படி இல்லாமல், ஒரு அறையில் தனியாக இருப்பதால் மட்டும் ஆன்மிக முன்னேற்றம் வந்துவிடாது.

---

ஒருவன் புத்திசாலியாக இருந்தால் அரிய பெரிய விஷயங்களை குறுகிய காலத்திற்குள் புரிந்துகொண்டு விடுகின்றான். ஆனால், முட்டாளுக்கு பல நாட்கள் ஆகின்றது. அதுபோன்று அவதார புருஷர்களுக்கு மனதை அடக்கி இறையனுபவத்தைப் பெறுவதற்கு சிறிய அப்யாஸம் போதும். மற்றவர்களுக்கு நீண்ட நாள் சாதனை தேவை.

- **ஸ்ரீ ஸ்வாமிஜி**

To imitate is poisonous

— Sri YogiRamsuratkumar

# வேத கதைகள் - 72

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## பஞ்சாக்னியின் பெருமை

ஒரு ஸமயம் ப்ரஜாபதியானவர் ப்ரஜைகளை படைத்ததால் அவருடைய சக்தி குறைந்தது. சக்தி குறைந்ததால் வீர்யம் குறைந்ததாக எண்ணினார். இவ்விதம் எண்ணி இழந்த வீர்யத்தை திரும்பி பெறுவதற்காக தவம் புரிந்தார். தவம் புரிந்ததால் தன்னிடத்தில் கொஞ்சம் வீர்யம் இருப்பதை அறிந்தார். அந்த வீர்யமும் காலத்தில் வளர்ந்தது. அந்த வளர்ந்த வீர்யமும் ப்ரஜாபதியினால் தாங்க முடியாததாக ஆயிற்று. அந்த சக்தியானது சீக்ரமாக வெளியேறி ஒரு உருவமாக அமைந்தது. அவ்விதம் அமைந்ததும் நன்கு விளங்குகிறதுமான அந்த சக்தியானது ஒரு பசுவாக ஆயிற்று. இந்த பசுவை நாங்கள்தான் ஏற்றுக்கொள்வோம் என்று தேவர்களுக்கும் அரசர்களுக்கும் போர் ஏற்பட்டது. அப்பொழுது போரை அடக்குவதற்காக, ''இந்த பசுவானது என்னைதான் சார்ந்தது. பால் மட்டும் உங்களுடையது'' என்று ப்ரஜாபதி கூறினார்.

ப்ரஜாபதியினால் தன்னுடையதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்த பசுவானது ப்ரஜாபதியினிடமிருந்து கிழக்காக நடந்தது. உடன் ப்ரஜாபதியானவர் (அதர்வ பிதும்மே கோபாய) என்ற மந்த்ரத்தால் அந்த பசுவை சுற்றி வளைத்தார். பிறகு அந்த பசுவானது தெற்கு நோக்கி சென்றது. அதை (நர்ய ப்ரஜாம்மே கோபாய) என்ற மந்திரத்தில் தடுத்தார். பிறகு மேற்கு நோக்கி நடந்தது. அதை (சக்குஸ்ய பசூன்மே கோபாய) என்று ப்ரஜாபதியானவர் தடுத்தார். பிறகு பசுவானது நான்காவது தடவையாக வடக்கு நோக்கி நடந்தது. அதை ப்ரஜாபதியானவர் (ஸப்ரத ஸபாம்மே கோபாய) என்ற மந்த்ரத்தால் தடுத்தார். பிறகு ஐந்தாவதாக பசு மேல் நோக்கி சென்றது. அதை (அஹே புத்நிய மந்த்ரம்மே கோபாய) என்ற மந்த்ரத்தால் தடுத்தார். இவ்விதம் அந்த பசுவானது தக்ஷிணாக்னி, கார்ஹபத்யம், ஆஹவனீயம், ஸப்யம், ஆவஸத்யம் என்று ஐந்து அக்னிகளை தன் நடையாலும் மந்த்ர சக்தியாலும் ஏற்படுத்தியது.

இந்த ஐந்து அக்னிகளுக்கும் பாங்தம் என்று பெயர் ஏற்பட்டது. ஐந்து ஐந்தாக எவை உள்ளதோ அதற்கு பாங்தம் என்று பெயர். இதை வைத்துதான் ஒரு கார்யம் நன்கு நடைபெற்றால் பாந்தமாக இருந்தது என்ற பழமொழி ஏற்பட்டது. கார்ஹபத்யம் என்பது அக்னிஹோத்ர வேதியின் மேற்புறத்தில் வாதுலமாக இருக்கும். தக்ஷிணாக்னி என்பது வேதியின் தெற்கில் பாதி சந்த்ரன் உருவமாக இருக்கும். ஆஹவனீயம் என்பது வேதியின் கிழக்கில் சதுரமாக இருக்கும். ஆனால், கார்ஹபத்யத்தில்தான் எப்பொழுதும் அக்னி அணையாமல் இருக்கும்.

வித்வான்கள் சாஸ்திர விவாதம் செய்யுமிடத்தில் ஒரு அக்னி ஜ்வலித்துக்கொண்டே இருக்கும். இதற்கு ஸப்யம் என்று பெயர். சமையல் அறையில் அணையாமல் ஒரு அக்னி இருக்கும். இதற்கு ஆவஸத்யம் என்று பெயர். இவ்விதம் பண்டைய காலங்களில் ஒவ்வொரு ப்ராம்மண இல்லங்களிலும் அக்னி இருந்தது. (அக்னி தேவ: த்விஜாதீனாம்) என்ற வாக்யப்படி ப்ராம்மணர்கள் அக்னியையே தெய்வமாக வழிபட்டு வந்தனர்.

இவ்விதம் எல்லா அக்னிகளிலும் ப்ரஜாபதியின் சக்தியே பசுவாக உருவெடுத்தது. அந்த பசுவானது ஐந்து பக்கங்களிலும் சென்றதால் மந்த்ர சக்தியால் பஞ்சாக்னி ஏற்பட்டது என்று இந்த கதையின் மூலமாக நம்மால் நன்கு அறியப்படுகிறது.

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhura Murali" every month in English/Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamiji's lectures/essays
5. Articles on religion, Philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas & more.

# எந்தரோ மஹானுபாவுலு - 63

சில காலம் கழித்து நிமாயி ஆசார்யரின் ஸத்ஸர்க்கத்தில் வந்து அவரை மிகவும் ஸ்நேகம் செய்ய ஆரம்பித்து பூஜிக்கத் தொடங்கியதும் நிமாயியின் அம்மா சசிமாதாவிற்கு பயம் ஏற்பட்டது. மஹாப்ரபு விஷ்ணுப்ரியாவிடம் கூட அதிகம் பேசாமல் ஸதா பக்தமண்டலியிலேயே அமர்ந்து ஸ்ரீ கிருஷ்ண கதை பேசவும், கேட்கவும் ஆரம்பித்து வீட்டுக்கே வராமல் அனேக நாட்கள் இருப்பதைப் பார்த்தவுடன் அவளுக்கு மனம் தாளாமல் ஒருநாள் ''இந்தக் கிழவரான அத்வைதாசார்யருக்கு இந்த ஏழை விதவையிடம் தயையே கிடையாதா? ஒரு பிள்ளையை இவர் ஸன்யாசி ஆக்கிவிட்டார். என் கணவரும் என்னை நிர்கதியாகவிட்டு பரலோகம் சென்றுவிட்டார். எனக்கு இப்போது ஒரே கதி நிமாயிதான். குருடனுக்கு இருக்கும் கழிபோன்று என் ஒரே ஆதாரமான நிமாயியையும் ஆசார்யர் ஸன்யாசி ஆக்கிவிடுவார் போலிருக்கிறதே. எப்போதும் அவனைக் கூப்பிட்டு பஜனை செய்யச் சொல்லுகிறார். என் பையன் சாது. அவனை ஈச்வரன் என்று அனைத்து பக்தர்களிடமும் கூறி அவனை விரக்தனாக ஆக்கிவிட்டார். அவன் வீட்டைக் கவனிப்பதே இல்லை. எப்போதும் பக்தர்களுடனே சுற்றுகிறான்'' என்று புலம்பினாள்.

அன்னையின் இந்த வார்த்தை ஸ்ரீவாஸ் போன்ற பக்தர்களுக்கும், அத்வைதாசார்யருக்கும் வருத்தத்தை அளித்தது. ப்ரபுவுக்கும் இது புரிந்துவிட்டது. அன்னை வைஷ்ணவ அபராதம் செய்துள்ளாள் என்றும், அவளுக்கு வைஷ்ணவ நிந்தையிலிருந்து ப்ராயச்சித்தம் செய்யவேண்டும் என்றும் மஹாப்ரபு முடிவு செய்தார்.

ஒருநாள் ப்ரபு பகவத் ஆவேசத்தில் பகவானின் மூர்த்திகளை எல்லாம் ஒரு புறம் அகற்றிவிட்டு தானே பகவானின் சிம்மாசனத்தில் அமர்ந்துகொண்டார். பக்தர்களை வரதானம் கேட்குமாறு பணித்தார். பக்தர்களும் தங்கள் தங்கள் இஷ்டப்படி வரதானம் கேட்டுப் பெற்றுக்கொண்டனர். ப்ரபுவும் பகவத் ஆவேசத்தில் அனைவருக்கும் அவரவரது மனோபீஷ்டம் நிறைவேற வரம் அருளினார். அப்போது

ஸ்ரீவாஸ்பண்டிதர், ''ப்ரபோ! சசீமாதா பாவம், எப்போதும் துக்கமாகவே உள்ளார். அழுதுகொண்டே இருக்கிறாள். நீங்கள் அவள் மீது க்ருபை செய்து அவளது சோகத்தைப் போக்க வேண்டும்'' என வேண்டினார். ப்ரபு ஆவேசத்துடன், ''சசீமாதாவின் மீது ஒருபோதும் கிருபை செய்ய முடியாது! அவள் வைஷ்ணவ அபராதம் செய்துள்ளாள். என்னிடம் அபராதம் செய்தால் நான் மன்னித்துவிடுவேன். ஆனால், வைஷ்ணவர்களிடம் அபராதம் செய்பவர்களை மன்னிக்கும் திறன் என்னிடம் இல்லை'' என்று கூறிவிட்டார்.

ஸ்ரீவாஸ்பண்டிதர் தீனமாக, ''ப்ரபோ! - எந்த அன்னை உங்களை கர்ப்பத்தில் தரித்தாளோ அவள் அபராதத்தைக்கூடவா மன்னிக்கமாட்டீர்கள்? உங்களை தரித்ததாலே அவள் ஜகஜ்ஜனனியாகி விட்டாளே! அவளுக்கு அனைவருமே புத்திரர்கள்தான். அவள் யாரை வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் சொல்லலாமே!'' என்றார்.

ப்ரபு, ''என்ன ஆனாலும் வைஷ்ணவர்களுக்கு யார் அபராதம் செய்தாலும் தவறுதான். ஸாக்ஷாத் மஹாதேவனானாலும் வைஷ்ணவ அபராதம் செய்தால் தத் க்ஷணமே அபராதி ஆகிவிடுவார்'' என்றார். ஸ்ரீவாஸ் பண்டிதர், ''ப்ரபோ! அப்படியானால் இந்த அபராத விமோசனத்திற்கு என்ன உபாயம்?'' என்று கேட்டார்.

ப்ரபு, ''சசீமாதா அத்வைதாசார்யருக்கு அபராதமிழைத்து உள்ளாள். ஆசார்யனின் சரணதூளியை அன்னை சிரசில் தரித்துக் கொண்டாலும், ஆசார்யரே தனது மனப்பூர்வமாக அன்னையை மன்னித்தாலும் மட்டுமே அவள் என்னுடைய க்ருபைக்குப் பாத்திரமாவாள்'' என்று கூறினார்.

அப்பொழுது ஆசார்யர் வேறிடத்தில் இருந்தார். உடனே பக்தர்கள் ஆசார்யரிடம் ஓடிச்சென்று அனைத்து விருத்தாந்தங்களையும் கூறினார்கள். அதைக் கேட்டு அவர் ஆச்சரியமடைந்து கண்ணீர் பெருக்கலானார். அழுதுகொண்டே, ''இதுதான் ப்ரபுவின் பக்தவாத்ஸல்யத்தைக் காட்டுகிறது! ஜகன்மாதா சசீமாதா எங்காவது அபராதியாக ஆவாளா? ப்ரபுவின் இஷ்டம் இப்படி இருக்குமானால்,

இந்த உபதேசத்தை அளிக்கக்கூடிய நாடகத்தில் எனக்கு இப்படி ஒரு பாத்திரத்தை அளிக்க அவர் விரும்பினால் நான் மனப்பூர்வமாக, அன்னைக்கு விரோதமாக என் மனதில் துளிக்கூட எண்ணம் கிடையாது என்று கூறுகிறேன். அன்னையை மன்னித்துவிட்டேன் என்று நான் கூற வேண்டும் என்று ப்ரபுவின் ஆணைப்படி நீங்கள் விரும்பினால் அப்படியே கூறுகிறேன். ஆனால், உலகமே வணங்க வேண்டிய அன்னைக்கு என் சரண தூளியை அளிக்க வேண்டும் என்றால் அது எப்படி முடியும்?'' என்று அவர் பேசிக்கொண்டிருக்கும் போதே சசீமாதா அங்கு வந்து சேர்ந்து அத்வைதாசார்யரின் சரண தூளியை எடுத்து தன் தலையில் தூவிக்கொண்டாள்! பக்தர்கள் ப்ரசன்னமானார்கள். ஆனந்தக் கூத்தாடினர், ஒருவரை ஒருவர் மகிழ்வுடன் ஆலிங்கனம் செய்துகொண்டனர்.

இதேபோல் நவத்வீபத்தில் தேவானந்த பண்டிதர் என்று ஒருவர் இருந்தார். அவர் சாஸ்த்திர பண்டிதர். விரக்தர், பாகவதம் கற்பிப்பதில் நிகரற்றவர். வெகு தூரத்திலிருந்து வித்யார்த்திகள் அவரைத் தேடித்தேடி வந்து ஸ்ரீமத்பாகவத பாடம் கேட்டுச் செல்வார்கள். ஆனால், அவர் மனதில் ப்ரேமை அங்கீகரிக்கவில்லை. ஸம்ஸார சுகத்தில் விரக்தியும் அளவற்ற ஞானமும் இருந்தும் ஒரு மஹாபுருஷரது க்ருபைக்குப் பாத்திரமாகாததால் அவரது ஹ்ருதயத்தில் ப்ரேமை ஊற்றெடுக்கவில்லை. ஒரு ஸமயம் நகர்வலம் வரும்பொழுது க்ருபா ஸமுத்திரமாகிய மஹாப்ரபு அவரிடம் வாக்குவாதம் செய்து அவர் மேல் க்ருபையைப் பொழிந்தார்.

தேவானந்தர் பாகவதம் கற்பித்துக்கொண்டிருக்கும் ஸமயம் அங்கு சென்ற ப்ரபு அவரிடம் சிறிது கோபமாக, ''பண்டிதரே! ஸ்ரீமத்பாகவதத்தின் அர்த்தத்தை ஏன் அனர்த்தமாக்குகிறீர்! உமக்கு என்ன பாகவதார்த்தம் தெரியும். ஸ்ரீமத் பாகவதம் ஸாக்ஷாத் ஸ்ரீக்ருஷ்ணனின் விக்ரஹம். யார் ஹ்ருதயத்தில் ப்ரேமை இல்லையோ, சாதுக்களிடத்திலும், ப்ராஹ்மண, வைஷ்ணவர்களிடத்திலும் ப்ரேமை இல்லையோ அவன் பாகவத புத்தகத்தைத் தொடக்கூட அதிகாரி இல்லை. பாகவதம், கங்காமாதா, துளஸிமாதா, பகவத்பக்தன் - இவைகள் பகவானின் ரூபமே. யாருக்கு ஹ்ருதயம் வறண்டுள்ளதோ, அந்தகரணத்தில் பக்தியில்லையோ அவனால் இவைகள் மூலம்

என்ன பயன் பெறமுடியும்? ஏனோ தானோ என்று ஞான விஷயங்களை பேசுகிறீரா அல்லது புரிந்துகொண்டுதான் பேசுகிறீரா? கொண்டாருங்கள், உங்கள் பாகவத புத்தகத்தை! கிழித்து கங்கா ப்ரவாஹத்தில் எறிந்துவிடுகிறேன்'' என்று கூறி **பா**வ ஆவேசத்துடன் அவரது பாகவத புத்தகத்தைக் கிழிப்பதற்காக ஓடினார். பக்தர்கள் அவரைப் பிடித்து நிறுத்தி சாந்தப்படுத்தினர். மெதுவாக அவரை முன்னே அழைத்துச் சென்றனர்.

ப்ரபு திரும்பி தேவானந்தரின் அருகில் வந்தார். அப்போது அவருக்கு ஆவேசம் தணிந்து இருந்தது. ப்ரபு கூறலானார், ''உங்களுக்கு நினைவிருக்கிறதா? நான் ஒரு முறை பாகவத பாடம் நடத்திக் கொண்டிருந்தபொழுது ஸ்ரீவாஸ்பண்டிதரும் நீங்களும் கூட அமர்ந்திருந்தீர்கள். எந்த பாகவதத்தில் அக்ஷரத்துக்கு அக்ஷரம் ப்ரேமரஸம் நிரம்பி வழிகிறதோ அதைப்பற்றி நான் சொல்லக்கேட்டு ஸ்ரீவாஸ்பண்டிதர் ப்ரேமையில் நினைவிழந்து மூர்ச்சையானார். உங்களது பக்தர்கள் அவரை அப்படியே தூக்கி வெளியில் விட்டுவிட்டு வந்தார்கள். நீங்கள் அப்போது ஒன்றும் நடவாததுபோல் அதைக்கண்டு பேசாமலிருந்தீர்கள். மஹாபாகவதரான ஸ்ரீவாஸ் பண்டிதரின் **பா**வங்களை உங்களாலேயே புரிந்துகொள்ள முடியவில்லையே. உங்களது பக்தர்களுக்கு அது எப்படிப்புரியும்? இங்ஙனம் நீங்கள் அப்போது ஒரு பகவத் பக்தருக்கு அபராதம் இழைத்துள்ளீர்கள்'' என்றார்.

தேவானந்தர் விரக்தர், வித்வான், சாஸ்த்ரக்ஞர், இருந்தும்கூட ப்ரபுவின் கோபவசனங்களுக்கு அவர் பதில் ஏதும் கூறவில்லை. பகவத் க்ருபையினால் அவரது புத்தி சுத்தியாகியது. அவருக்குத் தனது தவறு புரிய ஆரம்பித்தது. ப்ரபுவின் சரணங்களில் வீழ்ந்தார். அறியாமையால் ஸ்ரீவாஸ்பண்டிதரிடம் தான் இழைத்த அபராதத்திற்காக க்ஷமையை யாசித்தார். இப்படி ப்ரபுவின் க்ருபைக்கு பாத்திரமான அவருக்கு மனதில் பக்திரஸம் உதயமாயிற்று. அன்றிலிருந்து அவர் ப்ரபுவின் ப்ரிய பக்தரானார்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# ஸனாதனப்புதிர் - 27

- தொகுப்பு- **'ஆத்ரேயன்',** சென்னை

1. துளசிதேவியின் பெற்றோர்கள் பெயர் என்ன? எந்தக் கடவுளின் அம்சமாக கருதப்படுகிறாள்?
2. சீதலாதேவி என்று யாரை குறிப்பிடுகிறார்கள்? இவரது வாகனம் எது?
3. காளிதாசன் எழுதிய முக்கிய நூல்கள் யாவை?
4. கருடன் யாரை மணந்தார்? கருடனின் பிள்ளையின் பெயர் என்ன?
5. தன்வந்தரியின் மற்றொரு பெயர் என்ன?
6. முத்ராராக்ஷஸம் யாரால் எழுதப்பட்டது? அந்த நூலின் முக்கியமான கதாபாத்திரம் யார்? அவர் எழுதிய நூலின் பெயர் என்ன?
7. பலராமன் ரேவதி இவர்களது புதல்வர்கள் பெயர் என்ன?
8. ஒரு அக்ஷௌஹிணி சேனையின் எண்ணிக்கை என்ன?
9. மஹாபாரதப் போரில் எத்தனை அக்ஷௌஹிணி பங்கு பெற்றது? ரத, கஜ, துரக, பதாதிகள் எண்ணிக்கை என்ன?

பதில்களுக்கு 21-ம் பக்கம் பார்க்க

''வேதோ அகில தர்மமூலம்'' அதாவது வேதம்தான் உலகத்தில் உள்ள எல்லாவற்றிற்கும் ஆதாரம். வேதத்தை ரக்ஷித்தால்தான் உலகத்தை ரக்ஷிக்க முடியும். அதனால்தான் இறைவனுடைய பத்து அவதாரங்களில் முதல் அவதாரமான மத்ஸ்யாவதாரத்தில் பகவான் வேதத்தை ரக்ஷித்துக்கொடுத்தான்.

**-ஸ்ரீ ஸ்வாமிஜி**

ஸ்ரீ ஹரி:

## மதுரமுரளி சந்தா

''மதுரமுரளி'' மாத இதழுக்கு புதியதாக சந்தாதாரராக விரும்புபவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

''மதுரமுரளி'', ப்ரேமிகபவனம், New No. 2, Old No. 24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 83.

சந்தா விவரம் : ஆண்டு சந்தா ரூ. 60/- தனி ப்ரதி ரூ. 5/-

ஆயுள் சந்தா ரூ. 1000/-

வெளிநாடு : ஆண்டு சந்தா : ரூ. 300/-

மதுரமுரளி இதழுக்கான சந்தாவை, **''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'** என்ற பெயரில் மட்டுமே M.O. or DD. ஆக அனுப்பவேண்டும். தயவுசெய்து காசோலையாக அனுப்ப வேண்டாம். மணி ஆர்டரில் பணம் அனுப்பும்பொழுது, பெயர், முகவரி, மதுரமுரளி சந்தா எண் முதலியவற்றை (for Renewal) முதலியவற்றை "Space for Communication"ல் கட்டாயம் எழுத வேண்டும்.

மதுரமுரளிக்கான சந்தாவை புதுப்பிப்பவர்கள் (Renewal) சந்தா எண்ணை குறிப்பிட்டு Subscription Renewal என்று எழுதி அனுப்ப வேண்டும். சந்தா எண் இல்லாமல் வரும் சந்தா தொகையானது அவர்கள் பெயரில் எடுத்துக்கொள்ள இயலாது.

சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது அதை அந்த மாதத்தின் 15-ந் தேதிக்குள் எழுதி அனுப்ப வேண்டும். 15-ந் தேதிக்கு மேல் வரும் முகவரி மாற்றத்தை அடுத்த மாதத்தில் தான் செயல்படுத்த முடியும்.

Email-ல் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :
contact@madhuramurali.org

God is infinite & there are
infinite ways to reach Him.

— Sri YogiRamsuratkumar

# பாலகர்களுக்கு ஒரு கதை - 68

கேரள தேசத்தில் பூந்தானம் என்னும் ஒரு மஹாத்மா வாழ்ந்து வந்தார். தினமும் அவர் காலையில் எழுந்து குருவாயூரப்பனை வழிபட்டு எப்பொழுதும் குருவாயூரப்பனையே நினைத்திருக்கும் ஒரு உத்தம பக்தர். ஸ்ரீமத் பாகவதம் என்னும் நூல் கண்ணனின் ஸ்வரூபமாகும். குருவாயூரப்பனுக்கு பாகவத பாராயணம் மிகவும் பிடிக்கும் என்பதாலேயே பூந்தானம் தினமும் ஸ்ரீமத் பாகவதத்தை படித்து வந்தார். அவருக்கு நிறைய குழந்தைகள் இருந்தன. குடும்ப சூழ்நிலையின் காரணமாக அவரால் வீட்டில் நிம்மதியாக பாகவதத்தை படிக்க முடியவில்லை. அவரது வீட்டின் தோட்டத்தில் இரண்டு வாழை மரங்கள் பெரிதாக வளர்ந்திருந்தன. அந்த வாழைமரத்தடியில் ஒரு தர்பாசனம் போட்டு பலகைமேல் பாகவதம் வைத்து அதற்கு இரண்டு துளஸி தளங்கள் ஸமர்ப்பித்து விழுந்து வணங்கி, தினமும் பாகவதத்தை படித்துக்கொண்டிருப்பார்.

ஒரு நாள் பூந்தானம் பாகவதத்தின் மூன்றாவது ஸ்கந்தத்தை மிகவும் ரஸித்து பாராயணம் செய்துகொண்டிருந்தார். அந்த ஸ்கந்தத்தில் வைகுண்டத்தின் வர்ணனை சொல்லப்பட்டுள்ளது. அதைப் படிப்பவர்களுக்கெல்லாம் வைகுண்டத்தை பார்ப்பதற்கு ஆசை வந்துவிடும். பூந்தானம் அப்படி படிக்கும்பொழுது, ''இந்த வைகுண்ட வர்ணனை மிகவும் அழகாக உள்ளதே. எனக்கு வைகுண்டத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையுள்ளதே எனக்கு வைகுண்ட தரிசனம் கிடைக்குமா'' என்று பகவானிடம் ப்ரார்த்தனை செய்து கதறி அழுதார். உண்மையான பக்தனின் ஆசையை பகவான் புறக்கணிப்பானா? ஒருகாலமும் மாட்டார். மனமுருகி பிரார்த்தித்ததால் பூந்தானத்திற்கு வைகுண்ட தரிசனம் ஏற்பட்டது.

அந்த தரிசனத்தில், வைகுண்டத்தில் இருப்பவர்களெல்லாம் நான்கு கைகள் உடையவர்களாகவும், சங்கு சக்கரம் வைத்திருப்பவர்கள் ஆகவும், மாலை, பீதாம்பரம் அணிந்து வர்ணிக்க முடியாத மிகவும் அழகுள்ளவர்களாகவும் இருந்தனர். விஷ்ணுவின் தூதர்கள், 'பார்ஷதர்கள்' விஷ்ணு போலவே இருந்தார்கள்.

வைகுண்ட தரிசனம் கண்ட பூந்தானம், புளகாங்கிதம் அடைந்தார். மேலும் வைகுண்டத்தின் ஸமீபத்தில் செல்லும்பொழுது இரண்டு விஷ்ணுதூதர்கள் பூந்தானத்தை விழுந்து நமஸ்கரித்து வணங்கினார்கள். பூந்தானத்திற்கு தூக்கி வாரிப்போட்டது. ''இவர்கள் விஷ்ணு பார்ஷதர்கள். பகவான் விஷ்ணுவின் ஸமீபத்தில் வசிப்பவர்கள். நானோ ஸாதாரணமானவன். குருவாயூரப்பனின் கிருபையால் இன்று வைகுண்டத்தை நேருக்கு நேர் தரிசனம் பெற்றேன். இவர்கள் என்னை முன்பின் பார்த்ததில்லை. அப்படியிருக்க என்னை எதற்கு விழுந்து வணங்குகிறார்கள்'' என்று ஆச்சரியப்பட்டார். அப்பொழுது அவர்கள், ''ஸ்வாமி! உங்கள் கிருபையால் எங்களுக்கு வைகுண்டம் கிடைத்தது. நாங்கள் விஷ்ணுவின் பார்ஷதர்களானோம்'' என்றனர். அதற்கு பூந்தானம், ''நீங்கள் யார்? உங்களுக்கு நான் என்ன செய்தேன்? எப்படி நீங்கள் வைகுண்டம் அடைந்தீர்கள்?'' என்று கேட்டார்.

அதற்கு அந்த விஷ்ணு பார்ஷதர்கள், ''நீங்கள் தினமும் இரண்டு வாழை மரத்தடியில் அமர்ந்து ஸ்ரீமத் பாகவதத்தை படிப்பீர்களல்லவா!. அந்த இரண்டு வாழைமரங்கள்தான் நாங்கள். நீங்கள் படிக்கக்கூடிய பாகவதத்தை கேட்டு கேட்டு அதன் பலனாக எங்களுக்கு வைகுண்டம் கிடைத்தது. அது மட்டுமின்றி விஷ்ணு தூதர்களாகும் பாக்கியமும் கிடைத்தது. இதற்கெல்லாம் தாங்கள் தான் காரணம் என்று சொல்லி விழுந்து வணங்கினர். பூந்தானம் வைகுண்டத்தை தரிசனம் செய்தார். **பா**வசமாதி, யோகநிலை கலைந்தது.

தன்னிலைக்கு வந்தார். அவருக்கு வைகுண்டத்தில் பார்த்தது எதுவும் மறக்கவில்லை. அந்த விஷ்ணு பார்ஷதர்கள் பேசியதும் மறக்கவில்லை. எந்த மரத்தடியில் அமர்ந்து பாகவத பாராயணம் செய்வாரோ அந்த மரத்தடிக்கு சென்றார். அந்த வாழை மரங்கள் கீழே சாய்ந்திருந்தது. அந்த மரங்களுக்கு உயர்நிலை கிடைத்தது. பாகவதத்தை கேட்பதனாலேயே வைகுண்டம் மட்டுமில்லாமல் விஷ்ணு பார்ஷதர்களாகும் பாக்கியமும் கிடைத்தது. நாமஸங்கீர்த்தனம் செய்வதாலும், பகவானின் கதைகள் கேட்பதாலும் எல்லா ஜீவன்களும் உயர்ந்த நிலையை அடைகின்றன என்பது இதிலிருந்து தெரிகிறது.

# மாலே மணிவண்ணா - 10

– மகாவித்துவான், மயிலம் வே. சிவசுப்பிரமணியன்

திருமகளை இதயத்தில் வைத்துச் சிறந்த நின் மார்பு வேதப்பொருளை உட்கொண்டு பகவானைத் துதிப்பவர்கள் உரையோடு சிறந்து விளங்குகிறது என்று சொல்ல வந்த பரிபாடல் ஆசிரியர், அதனை நயமாக 'சிறந்து விளங்கவில்லை' என்றும் பொருள் தரும்படி சொல்லியுள்ளார்.

'உள்ளுநர் உரைப்போர் உரையொடு சிறந்தன்று' (35) என்னும் அவ்வடியின் பொருள் ஆழ்ந்து சிந்திக்கவல்லது. 'சிறந்தன்று' என்பது ஒரு சொல்லாகச் 'சிறந்தது' என்று பொருள்தரும். 'சிறந்தன்று' என்னும் சொல் செய்யுள் விகாரம் பற்றி இடையில் ஒரு 'த' கெட்டு 'சிறந்ததன்று' எனவரும். அப்போது அது 'சிறந்தது அன்று' என்று பொருளாகும்.

'திருமாலே! திருமகள் சேர்ந்துள்ள நின்மார்பு சிறந்து விளங்கவில்லை' என்று பொருள். ஏன் சிறந்து விளங்கவில்லை.

ஊழிக்காலத்துப் பெருவெள்ளத்திலிருந்து அந்த வெள்ள நீரால் கழுவப்பெற்று கூரிய வெள்ளையானை தன் கொம்பின் இடையிலே இந்த பூமியைத் தழுவித் தூக்கினபோது அதாவது பூதேவியை மணந்துகொண்டபோது சிறுபுள்ளி அளவான நிலமும் வெள்ளத்தால் வருந்தவில்லை என்று வேதம் கூறுகிறது. எவ்வாறு தன் கொம்பிடைப் பூமியைத் தழுவி இருந்தால் அது நிகழும்.

இப்படிப் பூமியோடு தழுவிக் கூடியிருக்கின்றபோது இன்னொருத்தி மார்பில் சேர்ந்திருப்பது கூடாதாகலான் அது சிறந்து விளங்கவில்லை என்றும் பொருள்படுகிறது. தன்னை அடைந்தவர்களுக்குத் தருவதற்கான ஸ்ரீயை அவன் உடையனாக இருப்பது பரமபத செல்வத்துக்கு உரியனாக இருப்பதைக் காட்டும். அவனுக்கு பூமியோடு உள்ள சம்பந்தம் பாகவதர்களுக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பினைக் காட்டும். அவன் ஸ்ரீதேவியோடு அகலாதிருப்பதும் பூதேவியின் குழந்தைகளாகிய அடியாரைத்

தன்னை அகலாது காப்பதற்கேயாகும். அதனால் ஒவ்வொரு அவதாரத்திலும் பாகவதர்களுக்கும் தனக்கும் உள்ள சம்பந்தத்தை நிலைநிறுத்துவதற்காக பூதேவியோடு தனக்குள்ள தொடர்பைக் காட்டுவான் பகவான்.

***பார் உண்டான் பார் உமிழ்ந்தான் பார்இடந்தான் பார்அளந்தான்***
***பாரிடம் முன்படைத்தான் என்பரால் - பாரிடம்***
***ஆவானும் தான் ஆனால் ஆரிடமே? மற்றொருவர்க்கு***
***ஆவான் புகாவால் அவை***

என்று நம்மாழ்வார் பெரிய திருவந்தாதி (42ல்) சொல்லி வற்புறுத்தினார்.

இவ்வளவு தொடர்புகளும் பூமியோடு இவன் ஒருவனுக்கே இருக்கிறபடியால் ஏன் அவளை இவன் தேவியாகக் கருதக்கூடாது என்ற கருத்தில் பரிபாடல் ஆதிவராகமாகிப் பூமி தேவியோடு மணம் செய்துகொண்டபோது இன்னொருத்தி மார்பில் இருப்பது சிறப்புடைத்தன்று என்று இலக்கியத்துக்கேற்ற கற்பனை நயம்படச் சொல்லிக் காட்டியது.

பரமபதத்தோடு அவனுக்குள்ள ஸம்பந்தத்தை ஸ்ரீதேவியும் பாகவதர்களோடு அவனுக்குள்ள நெருக்கத்தை பூதேவியும் காட்டி நிற்கிறார்கள் எனலாம். ஸ்ரீதேவியோடு தனக்குள்ள சம்பந்தத்தைக் கைவிடவும் தயாராகிற பகவான் பாகவத லோகமாதாவாகிய பூமிதேவியோடு தனக்குள்ள சம்பந்தத்தை கைவிடச் சிறிதும் இசையான் என்பது.

***'தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாள் ஆகலும் சிதகுரைக்குமேல்***
***என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்'***

என்னும் நம்மாழ்வார் திருவாய்மொழி இங்கு அனுபவிக்கத்தக்கது. தன் அடியார்களைப் பற்றி மகாலக்ஷ்மியே குறை சொன்னாலும் பெருமான் அடியார்களுக்கு பரிந்துகொண்டு பேசுவானாம். 'என் அடியார் தவறு செய்யார். அப்படி ஒருவேளை செய்திருந்தால் அதுவும் ஏதாவது ஒரு நன்மையின் பொருட்டு செய்ததாக இருக்கும்' என்று சொல்வான் பகவான்.

எனவே, தன் மார்பகத்துப் பால் உண்ணும் குழந்தையை ஒரு கையால் அணைத்துக்கொண்டு மற்றொரு கையால் கணவனையும் அணைத்து விடாதிருக்கும் பத்தினிபோல் பகவான் மார்பிலே ஸ்ரீதேவியையும், ஆதிவராகமாய நிலையில் கொம்பிலே பாகவத மாதாவாகிய பூதேவியையும் விடாதிருக்கிற அழகைச் சிந்திக்கச் செய்கிறது பரிபாடல் வரிகள்.

பாகவதர்களிடையே பகவானுக்குள்ள அதிதீவிர வாத்ஸல்யத்தை நம்மாழ்வார்,

***'சிக்கெனச் சிறிதோரிடமும் புறப்படாத் தன்னுள்ளே, உலகுகள்***
***ஒக்கவே விழுங்கிப் புகுந்தான் புகுந்ததற்பின்***
***மிக்க ஞான வெள்ளச் சுடர்விளக்காய்த் துளக்காற்று***
***அமுதாமாய், எங்கும் பக்க நோக்கறியான் என் பைந்தாமரைக் கண்ணனே'***

என்ற பாசுரத்தில் கூறியருளினார். இப்பாடலின் இறுதி அடிக்கு வியாக்கியான சக்ரவர்த்திகள் ஒரு நிகழ்ச்சியை அற்புதமாக விவரித்தார்கள்.

'ஆசார்யரும் எம்பெருமானும்' ஒன்றித்து நின்று அனுபவித்துக் கொண்டு இருந்தார்கள்; அப்போது பகவான் இரண்டொருமுறை எட்டிப் பார்த்தான். அது கண்ட ஆசார்யர், 'இங்கே பகவானுடைய கொட்டைக் குலத்தில் யாரேனும் வந்தார் உண்டோ! என்று கேட்டாராம் - எப்படித் தெரிந்துகொண்டீர்கள் என்று பக்கத்தில் மறைந்து நின்ற பாகவதர்கள் கேட்டார்கள். (கொட்டைக் குலம் என்றால் பாகவதர் குலம்) அப்போது ஆசார்யர் சொன்னார்.

'நானும் தானுமாக அனுபவியா நின்றால், பெரிய பிராட்டியார் திருமுலைத்தடத்தால் நெருக்கினாலும் அப்பக்கம் பார்த்தறியாதவனாகிய பகவான் இன்று இரண்டொருமுறை எட்டிப் பார்த்தான்; அதனால் பாகவதர் குலத்தில் யாரேனும் வந்திருக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டேன் என்று சொன்னார் என்பதாக ஒரு நிகழ்ச்சியையும் உரையில் காட்டியுள்ளார்கள்.

தன் அடியார்களுக்கு ஆதாரமான பூமியை அவன் என்றும் கைவிடாதவன். இந்த பூமிக்கும் அவனுக்கும் உள்ள சம்பந்தம்.

***'பூ: பாதௌ யஸ்ய நாபிர்வியதஸுரநிலஶ் சந்த்ர ஸூர்யௌ ச நேத்ரே கர்ணா வாஶாஶ் ஶிரோ த்யௌர், முகமபி தஹநோ யஸ்ய வாஸ்தேயமப்த்தி:***
***அந்தஸ்த்தம் யஸ்ய விஶ்வம் ஸுரநர ககோபோகி கந்தர்வதைத்யை: சித்ரம் ரம்ரம்யதே தம் த்ரிபுவநவபுஷம் விஷ்ணுமீஶம் நமாமி***

***ஓம் நமோ பகவதே வாஸுதேவாய***

என்று சுலோகத்தில் சொல்லப்பெறுகிறது.

எவருக்கு பூமி இருகால்களோ, ஆகாசம் தொப்புள் பகுதியோ, வாயு பிராணவாயுவோ, சந்திரனும் சூரியனும் இரு கண்களோ, திசைகள் செவிகளோ, வானுலகம் தலையோ, அக்னி வாயோ, கடல் சிறுநீரோ, எவருடைய உடலினுள் அமைந்த இவ்வுலகம் பல்வேறு மனிதர், தேவர், பறவை, விலங்கு எனப் பலவாறு தோன்றி இன்பமாக அனுபவிக்கப் பெறுகிறதோ மூவுலகையும் வடிவாகக் கொண்ட அந்த எங்கும் நிரம்பிய ஆண்டவனை வணங்குகிறேன். பகவான் வாஸுதேவனுக்கு வணக்கம் என்பது சுலோகத்தின் பொருள். பகவானது முழு வடிவில் கால் பங்கே இந்த பூமி என்று புருஷ ஸூக்தம் கூறும். வாமனாவதாரத்தில் இருகாலடிகளில் உலகம் அடங்கியது என்பதும் இக்கருத்தேயாகும்.

பகவானே மூவுலகையும் வடிவாகக் கொண்டவர் என்னும்போது ஸ்ரீதேவியை இதயத்தில் கொண்டுள்ள பகவான் பூதேவியாகத் தானே இருக்கிறார். அவரே உலகினுள் நுழைந்து உலகை விளையாடச் செய்து மகிழ்கிறார். அதனால் அவர் வாசுதேவர் என்கிறது சுலோகம்.

ஸ்ரீ சங்கரரின் சிஷ்யரான ஸ்ரீ தோடகாசார்யர் எழுதிய ச்ருதிஸார ஸமுத்தரணம் என்ற நூலின் கடைசி சுலோகம் உலக சம்பந்தமே 'விச்வம்' என்ற நாமத்திலும் அடங்கியுள்ளது என்பதாகும்.

இந்த பூமகளின் அணைப்பைத் திருமகளோடு இணைத்து மகிழ்கிறது பரிபாடல். இந்தப் பகுதியைப் பார்ப்போம்.

***'வளர் திரை மண்ணிய கிளர் பொறி நாப்பண்***
***வைவான் மருப்பின் களிறு மணன் அயர்பு***
***புள்ளி நிலனும் புரைபடல் அரிது என***
***உள்ளுநர் உரைப்போர் உரையொடு சிறந்தன்று'' - 35***

பெருகிவரும் வெள்ளத்திலிருந்து முழுகி எடுத்தலால் கழுவப்பெற்ற, செம்புள்ளிகளை இடை இடை உடைய கூரிய வெளிய கொம்பினை உடைய ஆதிவராகம் தழுவி மணந்து கொள்ளுதலால் சிறுபுள்ளியளவான நிலப்பகுதியும் வெள்ளத்தால் துன்பப்படவில்லை என்று வேதப்பொருளை உட்கொண்டு சொல்வார் உரையொடு புகழப்பட்டது - புகழ் பட்டதாய் இல்லை = (வை - கூரிய, வால் - வெண்மை, களிறு - பன்றிக்குள் ஆணை வழங்கும் மரபுப்பெயர், புரை - துன்புறல், உரை - சொல், புகழ் எனலும் ஆம், உள்ளுநர் - வேதப்பொருளை மனத்துள் கொண்டோர், வேதப்பொருள் - பூமிக்கும் பகவானுக்கும் உள்ள தொடர்பு பற்றி தோடகாசார்யர் சுலோகத்தில் கூறியது). (தொடரும்)

## ஸனாதனப்புதிர் - பகுதி 27க்கான விடைகள்

1. தர்மத்வஜன் - மாதவி, மஹாலக்ஷ்மியின் அம்சமாக
2. மாரியம்மன் - கழுதை
3. ரகுவம்சம்; குமாரசம்பவம், அபிஞான சாகுந்தலம், விக்கிரமோர்வசீயம், மாளவிகாக்னி மித்ரம், ருதுசம்ஹாரம், மேகசந்தேசம்.
4. தக்ஷப்ரஜாபதியின் நாலாவது பெண் - மகனின் பெயர் கபோதன்.
5. சுதாபாணி, அம்ருத கலசத்தை கையில் வைத்திருப்பதால்.
6. விசாகதத்தன் - சாணக்யன் - அர்த்த சாஸ்த்ரம்.
7. நிஷ்ஹதன், உல்முகன்:
8. பதாதி - காலாட்படை - 109350
   துரக - குதிரைப்படை - 65610
   கஜ - யானைப்படை - 21870
   ரத - ரதம் படை - 21870
9. 18 அக்ஷௌஹிணிகள்

| | | |
|---|---|---|
| ரதம் | - தேர் | - 3,93,660 |
| கஜம் | - யானை | - 3,93,660 |
| துரகம் | - குதிரை | - 11,80,980 |
| பாதாதி | - காலாட்படை | - 19,68,300 |

## ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 16 (தொடர்ச்சி)

ஒரு சமயம் கீர்த்தனை செய்துகொண்டு சில பக்தர்கள் நவத்வீபத்தில் ஸ்ரீ ஜகன்னாத்தாஸ் பாபாஜியின் குடிலுக்கு அருகில் சென்றனர். பாபாவும் பிஹாரியைத் தன்னை அவர்களுக்கு அருகில் அழைத்துச் செல்லுமாறு பணித்தார். பிஹாரி உடனே அவரைத் தோளில் சுமந்து கொண்டு சென்று அவர்கள் முன் கீழே கிடத்தினான். பாபாவும் அவர்களை நமஸ்கரிப்பது போல் கீழே படுத்துக்கிடந்தார். நாமகீர்த்தனம் ஆரம்பித்ததோ இல்லையோ, அவர் உத்வேகத்துடன் எழுந்து பாடிக்கொண்டே துள்ளித்துள்ளி ந்ருத்யம் செய்ய ஆரம்பித்தார். எந்த வளைந்த கிழட்டு தேகத்தை பிஹாரி தூக்கிக்கொண்டு வந்தானோ அதே தேகம் இப்போது இளைஞனைப் போல் நிமிர்ந்து நின்று, நடந்து, பாடி ஆட ஆரம்பித்துவிட்டது! மூன்று நான்கு அடிகள் பூமிக்கு மேல் உயர எம்பிக்குதித்து பரவசத்துடன் ஆடிஆடி அடிக்கடி மூர்ச்சையாகி பூமியில் விழுந்தார். உடலில் காயங்கள் ஏற்பட்டன. ஆனால், அவருக்கு ஏதும் தெரியவில்லை. அவர் மூர்ச்சையானால் பக்தர்கள் அவரது காதில் கீர்த்தனம் செய்வார்கள். உடனே நினைவு வந்து ஆடுவார். ஒன்றும் நடவாதது போலிருப்பார். அவரது **பா**வம் மற்றவர்களையும் தொற்றிக்கொள்ளும். மற்றவர்களும் மின்சாரத்தைத் தொட்டாற்போல குதித்து ஆனந்தமாக ஆடுவார்கள். இப்படியே ஆறு மணிநேரம் நடந்தது. பாபாவும் அவர்களுடன் நடந்து சென்று ஆடிவிட்டு வந்தார்!

பாபா இந்த நிலையை அடைவதற்கு முன் கடுமையான ஸாதனைகள் செய்வார். உலகத்தாருடன் பழகவே மாட்டார். பணத்தைத் தொடமாட்டார். ஒருமுறை பிஹாரியிடம் ஒரு தனவந்தர் ஒரு ரூபாய் தந்தார். அப்போது அவன் பாபாவை சுமந்துகொண்டு சென்றுகொண்டிருந்தான். சிறிது தூரம் சென்றதும் பாபா அவனை மறுபடி அந்த தனவந்தர் வீட்டுக்குச் செல்லுமாறு கூறினார். அங்கு சென்றதும் பிஹாரி வைத்திருந்த அந்த ஒரு ரூபாயை அவரிடமே திருப்பித்தந்துவிட்டு, ‘‘உன் பணத்தை எடுத்துக்கொள்! உன்னிடம் ஆயிரக்கணக்கில் பணம் உள்ளதாமே! என்னால் இந்த ஒரு ரூபாயின் உறுத்தலையே தாங்கமுடியவில்லை! நீ எப்படித்தான் ஆயிரக்கணக்கான

ரூபாய்களின் உறுத்தலைப் பொறுத்துக்கொள்கிறாயோ?'' என்று கூறிச்சென்றார். பிஹாரி வைத்துக்கொண்ட ஒரு ரூபாயே அவரை உறுத்தியதென்றால் என்ன ஆச்சரியம்!

பாபா மிகவும் கட்டுப்பாட்டுடன் ஆகாரம் உண்பார். மழைக்காலத்து நான்கு மாதங்களில் முதல் மாதத்தில் தினமும் மாலையில் நாலு வாழைப்பழங்கள் மட்டும் உண்பார். இரண்டாவது மாதத்தில் நாலு கொய்யாப்பழங்களும் மூன்றாவது மாதத்தில் பாலிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ''வே'' என்ற நீரும், நான்காம் மாதத்தில் வேகவைத்த உப்பில்லாத வாழைப்பூவை மட்டும் உண்பார்.

ஒரு முறை பாபா மந்த்ர புரச்சரணத்திற்காக ஹ்ருஷீகேசம் சென்றிருந்தார். பிஹாரியும் உடன் சென்றார். அப்போது அவர் தினமும் காலையில் 3 மணிக்கு எழுந்திருந்து குளித்துவிட்டு கதவைச் சாத்திக்கொண்டு ஜபம் செய்ய ஆரம்பிப்பார். மாலைவரை அன்னபானமின்றி ஜபம் செய்வார். அந்த நேரத்தில் யாருடனும் பேசமாட்டார். உண்ணமாட்டார், ஏதும் பானம் செய்ய மாட்டார். தப்பித்தவறி சிறுநீர் கழிக்க நேரிட்டாலோ அல்லது அபானவாயு வெளியிட்டாலோ மறுபடி குளித்துவிட்டு ஜபத்தை ஆரம்பிப்பார். மாலையில் ஹவிஸ் மட்டும் உண்பார்.

இரண்டுமாதம் கழித்து ஒருநாள் அவர் இருந்த இடத்துக்கு அருகில் அதிக அளவில் பழுத்துக் குலுங்கிய மரத்தைப் பார்த்து குதூகலித்து, ''பிஹாரி! இந்த மரத்தில்தான் எத்தனை பழங்கள் என்று பார்!'' என்று பேசிவிட்டார். மௌனம் கலைந்ததால் மறுபடியும் புரச் சரணத்தை முதலிலிருந்து ஆரம்பித்துக்கொண்டார். மூன்று மாதங்கள் கழித்து அவருக்கு கௌராங்கர், நிதாயி ஆகியோரின் தர்சனம் கிடைத்தது. சித்தபுருஷர்கள் பயமின்றி இருப்பார்கள். தன்னிஷ்டப்படி யாருக்கும் பயப்படாமல் நடந்துகொள்வார்கள்.

ஒரு சமயம் ப்ருந்தாவனத்தில் ஒரு தோட்டியிடம் அவர் ரொட்டியை உணவாக யாசித்தார். தோட்டி, ''பாபா! என்னிடம் விளையாடுகிறீர்களா'' என்றான். ''இல்லை இல்லை, எனக்கு மிகவும் பசிக்கிறது ரொட்டி தா'' என்றார் பாபா. ''நானோ தோட்டி, நீங்கள் என் கையால் தந்த உணவை எப்படி உண்பீர்கள்?'' என்றான் அவன்.

''இருந்தால் என்ன? நீ ப்ருந்தாவனத்து தோட்டியில்லையா? ப்ருந்தாவனத்து தோட்டி ப்ராம்மணர்களைவிட உயர்ந்தவன்'' என்றார் பாபா.

தோட்டியும் மறுக்காமல் பாபாவுக்கு உணவளித்தான். அதை அவர் உண்டு மகிழ்ந்தார். பிஹாரி இதைப் பார்த்துக் கொண்டிருந்தான். ''பாபா என்ன இப்படி செய்துவிட்டீர்கள்? உங்களை எல்லோரும் ஒதுக்கி விடுவார்களே! ப்ருந்தாவனத்தில் எப்படி இனி வாழ்வது'' என்று அவன் வருந்தினான். பாபா சிரித்துக்கொண்டார்.

இந்தச் செய்தி காட்டுத்தீ போல் ப்ருந்தாவனம் முழுவதும் பரவியது. உடனேயே அக்காலத்தில் அங்கு வாழ்ந்த பல பண்டிதர்களும் கோஸ்வாமிகளும் திரளாக பாபாவிடம் வந்தனர். பாபா, பிஹாரியிடம் அனைவருக்கும் ஆசனமளித்து அமர்த்துமாறு பணித்தார். ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு அனைவரும் மௌனமாக அமர்ந்தனர். யாருக்கும் முதலில் பேச ஆரம்பிக்க தைரியம் வரவில்லை. பாபாவே, ''நீங்கள் எல்லாரும் இங்கு ஏன் வந்துள்ளீர்கள் என எனக்குத் தெரியும்! ஏன் மனதில் இருப்பதைப் பேசமாட்டேன் என்கிறீர்கள்?'' என்று வினவினார்.

பணிவாக அவர்கள், ''பாபா! இன்று வ்ரஜத்திலுள்ள அனைத்து ஸாதுக்களுக்கும் சிரோமணி போன்றவர் தாங்கள்! உங்களுக்கு எதிராக யாராவது பேசினால் எங்களுக்கு வருத்தமேற்படுகிறது. இப்போது அனைவரும் பாபாவுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று பேசிக்கொள்கிறார்கள். சிலர் பாபாவே இப்படி தர்மத்தை மீறி நடந்தால் சமூகம் என்னாவது என்று கேட்கிறார்கள்! நாங்கள் என்ன செய்வது?'' என்று கேட்டனர்.

பாபா, ''நீங்கள் அனைவரும் கற்றுணர்ந்தவர்கள். ப்ருந்தாவன ரஜஸ்ஸின் மஹிமையைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? ப்ருந்தாவன ரஜஸ் க்ருஷ்ண ப்ரேமையினால் பூரணமாக சூழப்பட்டது. ப்ரஹ்மாவே அதற்கு ஆசைப்பட்டு அதில் ஒரு துளியாக தான் இருக்க விரும்புகிறார். அப்படியிருக்க எந்நேரமும் ரஜஸ்ஸை கூட்டிப்பெருக்கி உடல் பூராவும் ப்ருந்தாவன ரஜஸ்ஸால் பூசப்பட்டுத் திகழும் வ்ரஜவாஸியான ஒரு தோட்டி எவ்வளவு ச்ரேஷ்டமானவன், பவித்ரமானவன்?'' என்றார்.

யாராலும் அதற்கு மேற்பட்டு ஒன்றும் பேசமுடியவில்லை.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 94

*துப்பறிவில்லா இப்பிறப்பென் பயன்*
*ஒப்பிட வாயேன் அருணாசலா* (தொடர்ச்சி)

மனது அழியும்பொழுது ஆத்மசாக்ஷாத்காரம் ஏற்படுகிறது. அந்த உயர்நிலையை அடைந்தவருக்கு மறுபிறப்பு கிடையாது. அத்தகைய ஞானம் பெற்றவர்களுக்கு, யாரிடமும் கோபம் வராது. யாரைப் பார்த்தும் காமவசப்படமாட்டார்கள். எந்த பொருளிடமும் அவர்களுக்கு பயம் இராது. தனக்கு அன்னியமாக (தன்னைக் காட்டிலும் வேறாக) ஒரு பொருள் இருந்தால்தானே, அந்த பொருளிடம் பயமோ, கோபமோ வரும். மனதில்தான் இந்த த்வைதம் (தனக்கு அன்னியமாய் தோன்றுவது எல்லாம்) இருக்கிறது. மனது அழிந்தால், இந்த த்வைதமும் அழிகிறது. தனக்கு வேறாய் ஒரு பொருள் அப்பொழுது இல்லாததினால், காம, கோப, பயம் எல்லாம் தோன்றுவதற்கு இடமில்லை.

நம்முடன் பழகுகிறவரிடமோ, சம்பந்தப்படுகிறவரிடமோதான் நமக்கு கோபமும், பயமும் ஏற்படுகிறது. நாம் பஸ்ஸில் பயணம் செய்வதாக வைத்து கொள்வோம். நமக்கு அருகில் யாரோ ஒருவர் வந்து உட்கார்ந்து பயணம் செய்கிறார். அவரை நமக்கு முன், பின் தெரியாது. அவரிடம் நமக்கு விரோதம் வருவதில்லை. நம்முடன் அவருக்கு முன் சம்பந்தம் இல்லாததால், நமக்கு அவரைப் பார்த்தால் ஒன்றும் தோன்றுவதில்லை. (ப்ரியமுமில்லை, விரோதமும் இல்லை). வாழ்க்கையில் யாருக்கு கீர்த்தி (புகழ்) ஏற்படுகிறதோ, அவர்களுக்கே அபகீர்த்தியும் (புகழுக்கு பங்கம்) ஏற்படும். நாலுபேருக்கு மட்டுமே தெரிந்து வாழ்பவனுக்கு, கீர்த்தியும், அபகீர்த்தியும் கிடையாது.

ஒருவர் நம்மிடம் வேலை பார்த்து வருகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவருக்கு திடீரென்று ஒருநாள் லாட்டரியில் ஒரு லக்ஷ ரூபாய் பணம் கிடைத்துவிடுகிறது. நமக்கு அது தாளவில்லை அல்லவா?.

''நேற்று வரை நம்மிடம் வேலை பார்த்தவன். இன்று லக்ஷாதிபதியா'' என்று புழுங்குகிறோம். இதே லாட்டரியில் சேலத்தில் இருக்கும் ஒருவருக்கு பரிசு விழுந்ததாக பேப்பரில் அடுத்த நாள் வருகிறது. அந்த செய்தியை நாம் படித்துவிட்டு, நாம் பேப்பரை தூக்கிபோட்டு விடுகிறோம். காரணம், சேலத்தில் இருப்பவருக்கும் நமக்கும் சம்பந்தம் இல்லை. இதை நன்கு ஆராய்ந்து பார்த்தால் மனதானது Time & Space இவற்றிற்கு (கால, தேசங்களுக்கு) கட்டுப்பட்டதாய் இருப்பது தெரிய வருகிறது.

10 வருடம் முன் நமது வீட்டில் நமக்கு பிரியமான ஒருவர் இறந்து போனார். அப்பொழுது அழுதோம். இப்பொழுது அழவில்லை. தீபாவளி கொண்டாடுகிறோம். புதுவஸ்திரம் உடுத்தி கொள்கிறோம். பட்டாசு வெடிக்கிறோம். அவரை பற்றிய சிந்தனையே நமக்கு வருவதில்லை. ஆனால், இதே நம் உறவினர் மறைந்த அன்று, நமக்கு உலகமே இருண்டது போல் இருந்தது. ஆக, காலம் நம்மை மாற்றிவிட்டது. இப்படி time நம்மை மாற்றுவது போல் Spaceம் நம்மை மாற்றிவிடும்.

நமக்கு பிரியமான ஒருவர் வியாதியால் கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறார். நாம் அருகிருந்து பணிவிடை செய்கிறோம். அவர் வியாதியால் கஷ்டப்படும்பொழுது, நாமும் கஷ்டப்படுகிறோம். இப்படி வேதனைப்படுகிறாரே, இதற்கு முடிவில்லையா என்று நம் மனது நினைக்கிறது. ஆனால், ஒருக்கால் அவர் வேறு ஒரு ஊரில் இருந்து, இந்த வியாதியால் கஷ்டப்பட்டு, மருந்து சாப்பிட்டு, குணமானபின், நமக்கு கடிதம் எழுதினால், நமக்கு அத்தகைய பாதிப்பில்லை. ''நீங்கள் வியாதியால் கஷ்டப்பட்டது குறித்து மிகவும் வருத்தம். இப்பொழுது நலம்தானே'' என்று கேட்டு பதிலுக்கு ஒரு கடிதம் அனுப்பிவிட்டு அந்த நிகழ்ச்சியை மறந்து விடுகிறோம். ஆக, மனதில் ஏற்படும் துக்கமானது Time, Space இவற்றிற்கு கட்டுப்பட்டதே.

ஒரு பொருளிலிருந்து நமக்கு ஆனந்தம் வருவதில்லை. நமது குழந்தை நம்மிடம் வந்து நான் பரீக்ஷையில் பாஸ் செய்தேன் என்று சொன்னால் நமக்கு சந்தோஷம் ஏற்படுகிறது. பக்கத்து வீட்டு குழந்தை நம்மிடம் வந்து நான் பரீக்ஷையில் பாஸ் செய்துவிட்டேன்

என்று சொன்னால், நமக்கு அதே ஆனந்தம் ஏற்படுவதில்லை. ஏனெனில், நம் குழந்தையிடம் நமக்கு அபிமானமும், பிரியமும் இருப்பதால், நமக்கு ஆனந்தம் ஏற்படுகிறது. பக்கத்து வீட்டு குழந்தையிடம் அந்த அபிமானமும், பிரியமுமில்லாததால், ஒரே விஷயத்தை சொன்னால் கூட, ஆனந்தம் ஏற்படுவதில்லை.

சாலையில் நடந்து செல்கிறோம். ஓரிடத்தில் கூட்டமாய் இருக்கிறது. எட்டிப்பார்த்தால் விபத்து. அடிபட்டவர் யாரோ ஒருவர் என்றால், ''அடப்பாவமே'' என்று விலகி செல்கிறோம். தெரிந்த நண்பர் ஒருவருக்குதான் விபத்து என்றால், நமக்கு துக்கமும், பாதிப்பும் அதிகமாய் இருக்கிறது. நமக்கு பிரியமான ஒருத்தருக்கு அந்த விபத்து நேர்ந்தால், நாம் துக்கத்தால் துடித்துப்போய் விடுகிறோம். ஒரே சம்பவம்தான் எனினும், நமக்கு இருக்கும் சம்பந்தத்தால், துக்கத்தின் அளவு மாறுகிறது.

இந்த பொறாமை, பிரியம், வெறுப்பு, துக்கம், பயம், கோபம் அனைத்தும் மனதில்தான் இருக்கிறது. அதுதான் நமக்கு பிரியமானவர், அப்ரியமானவர் என்று பிரித்துகாட்டுகிறது. ஆனால், ஞானியானவர் இந்த மனதையே அழித்துவிடுவதால் அவருக்கு வெறுப்பு, விருப்பு கிடையாது. காலம் என்பதே மனதில்தான் இருக்கிறது. பூமத்திய ரேகை, தீர்க்கரேகை என்று (Atlas) வரைபடத்தில் வரைந்து வைத்திருப்பது போல், நாம் உலகில் காரியங்கள் செய்வதற்காக, இது காலை, இது மாலை, இது இரவு, இன்று இந்த தேதி, இது இந்த வருடம் என்று தீர்மானம் பண்ணிக்கொள்கிறோம்.

ஆகையால் ஆத்மசாக்ஷாத்காரம் அடைய எவ்வளவு காலம் எடுக்கும் என கேட்பதே தவறு. ஏனெனில், காலமும் ஒரு மாயையே (இல்லாத ஒன்று). காலம் என்பதே இல்லை. ஞானிக்கு பகலும், இரவும் கிடையாது. அவன் எந்தவிதமான கால, கட்டங்களிலும் மாட்டிக்கொள்வது கிடையாது. Time, Space இவற்றிற்கு தகுந்தாற் போல் தன்னை மாற்றிக்கொள்ளாதவனே ஞானி.

(தொடரும்)

# செய்திகள்

### மே 27-ந் தேதி முதல் - ஜூன் 1-ந் தேதி வரை — தஞ்சை விஜயம்

தஞ்சாவூர் Old Medical College Road-ல் உள்ள ஸ்ரீவரசக்தி வினாயகர் கோவிலில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாசம் ஏற்பாடாகி இருந்தது. கோவிலின் நிர்வாகத்தை சேர்ந்த திரு. ராஜகோபால் அவர்கள் உபன்யாசத்திற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். தினமும் திரளான ஜனங்கள் வந்து கதாச்ரவணம் செய்தனர். தஞ்சாவூரின் விஜயத்தின்பொழுது ஸ்ரீ ஸ்வாமிஜி, தஞ்சாவூரில் உள்ள பல ஆலயங்களுக்கு சென்று தரிசனம் செய்தார்கள். முக்கியமாக ஸ்ரீ பங்காரு காமாட்சி அம்மன் கோவில், ஸ்ரீ நவநீதக்ருஷ்ணன் கோவில், ஸ்ரீ நரசிம்மர் கோவில் போன்றவை இதில் அடங்கும்.

ஒருநாள் கணபதி அக்ரஹாரம் சென்று கணபதியை தரிசனம் செய்துவிட்டு அங்கு புதியதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு ஆகம பாடசாலைக்கும் சென்று வந்தார்கள். ஸ்ரீ காஞ்சி காமகோடி மடத்தின் பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் பெயரில் நடைபெறும் வித்யாசாலைக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி விஜயம் செய்தார்கள்.

31-ம் தேதியன்று திருவீழிமிழலை டாக்டர். சுப்ரமணியம் அவர்களின் பெண் சௌ. கனகாவின் பரதநாட்டியம் நடைபெற்றது. ஒன்பது வயதேயான கனகா மிகவும் அழகாக நாட்டியம் ஆடினாள். திருவையாறில் உள்ள ஸ்ரீ தியாகபிரும்மத்தினுடைய அதிஷ்டானத்திற்கும் ஸ்ரீ ஸ்வாமிஜி சென்று வந்தார்கள். தியாகபிரும்மம் பூஜை செய்து வந்த பட்டாபிஷேக ராமர் தஞ்சாவூரில் அவருடைய பரம்பரையில் வந்த ஒருவருடைய வீட்டில் உள்ளார். ஸ்ரீ ஸ்வாமிஜி அங்கு சென்று அந்த ராமரை தரிசனம் செய்து ஆனந்தம் அடைந்தார்கள். அங்கு, சிறிது நேரம் ராமநாமத்தின் பிரபாவத்தை பற்றியும், தியாகபிரும்மத்தை பற்றியும் பிரவசனம் செய்தார்கள்.

### பஞ்சமுக ஆஞ்சநேயர் பிரதிஷ்டை - 11.06.03

சென்னையில் உள்ள நங்கநல்லூரில் முப்பத்து இரண்டு அடி ஆஞ்சநேயரை பிரதிஷ்டை செய்தவர் ஸ்ரீ ரமணி அண்ணா அவர்கள். இன்று அந்தக் கோயில் மிகவும் பிரபலமடைந்து பல தேசங்களில் இருந்து பக்தர்கள் வந்து வழிபடக்கூடிய ஒரு புனிதத்தலமாக

விளங்குகிறது. அதற்குக் காரணம் அந்த ஆஞ்சநேயர் அத்தகைய வரப்ரஸாதியாக இருப்பதுதான். அந்தக் கோயில் வருவதற்கு மூலகாரணமாக இருந்த அதே ரமணி அண்ணா, ஆஞ்சநேயர் பிரேரணையின்பேரில் பாண்டிச்சேரியை அடுத்துள்ள பாப்பாஞ்சாவடி (பஞ்சவடி) என்ற இடத்தில் பஞ்சமுக ஆஞ்சநேயரை பிரதிஷ்டை செய்தார். அந்த வைபவத்தில் நம் ஸ்வாமிஜியும், தர்மாத்மா G.K. ராமமூர்த்தி அவர்களும் கலந்துகொண்டார்கள்.

விழா ஏற்பாடுகள் பிரம்மாண்டமாக இருந்தது. ஆஞ்சநேயருடைய மூர்த்தியும் அதி ஆச்சரியமாக இருந்தது. விமானம் ஆகாயத்தில் வட்டமடித்து புஷ்பமாரி பொழிந்தது. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் பேசும்பொழுது, ''அனுமாரால் அஸாத்யமான கார்யங்களைச் செய்ய முடியும் என்று நாம் நினைத்துக்கொண்டிருந்தோம். அத்தகைய அனுமாரை பூஜை செய்பவர்களும் அவரைப்போலவே அஸாத்யமான கார்யங்களை செய்துவிடுவார்கள் என்பது இன்று ஸ்ரீ ரமணி அண்ணாவைப் பார்க்கும்பொழுது தெரிகின்றது'' என்று பேசினார்கள். ஆயிரக்கணக்கில் பிரமுகர்களும், பக்தர்களும் விழாவிற்கு வந்திருந்தார்கள்.

### ஜூன் 16-ந் தேதி முதல் ஜூன் 20-ந் தேதி வரை — கோவை விஜயம்

கோயம்புத்தூரில் ராம்நகரில் உள்ள ஸ்ரீ ராமர் கோயிலில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாசம் ஏற்பாடாகியிருந்தது. முதலில் உடல்நிலை காரணமாக ஸ்ரீ ஸ்வாமிஜி கோவை நகருக்கு மற்றொருமுறை விஜயம் செய்யலாம் என்று இருந்தார்கள். இருந்தாலும் கோவை விஜயம் தீர்மானித்தபடியே நடந்தது. கோவையில் தினமும் கதை கேட்பதற்கு ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கூடியிருந்தார்கள். எல்லோரும் பரம ரசிகர்கள். மிகவும் ரஸித்து பக்தி பரவசத்துடன் கதை கேட்டார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிஜிக்கும் இத்தகைய ரஸிகர்களுக்கு கதை சொல்வது மிகவும் சந்தோஷமாக இருந்தது. இந்த உபன்யாசத்தை ராம் நகர் பஜனை கோஷ்டியின் நிர்வாகத்தினர் ஸ்ரீ நாகசுப்ரமணியன், ஸ்ரீ கிருஷ்ணன் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்த கோவை விஜயத்தின்பொழுது ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் ஸத்ஸங்கத்திற்கு ஸ்ரீ ஸ்வாமிஜி விஜயம் செய்து ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் சரித்ரத்தை பற்றி சிறிது நேரம் உபன்யாசம் செய்தார்கள்.

ராம் நகரில் நடைபெற்று வரும் ராம் நகர் ஸபர்பன் பள்ளியில் ஶ்ரீ ஸ்வாமிஜிக்கு பள்ளி மாணவர்களின் சார்பில் ஒரு வரவேற்பு கொடுக்கப்பட்டது. அங்கு ஶ்ரீ ஸ்வாமிஜி, ''வாழ்க்கையில் நம்பிக்கைதான் எல்லாவற்றிற்கும் அடிப்படை. இக்காலகட்டத்தில் குழந்தைகளுக்கு மனோபலம் தேவை. அந்த மனோபலத்தை வளர்த்துகொள்ள வேண்டும்'' என்பது பற்றி உரை நிகழ்த்தினார்கள். அந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் ஶ்ரீ ஸ்வாமிஜியிடம் மிகவும் பக்தியுடன் இருந்தார். எப்பொழுது ஶ்ரீ ஸ்வாமிஜி கோவை வந்தாலும் பள்ளிக்கு விஜயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**ஜூன் 23-ந் தேதி**

பழையகூடலூர் காலனி மாரியம்மன் கோவிலில் முதலாம் ஆண்டு கும்பாபிஷேக நிறைவு விழாவில் ஶ்ரீ ஸ்வாமிஜியும் தர்மாத்மா ஶ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்களும் கலந்துகொண்டார்கள்.

ஶ்ரீ ஹரி:

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

மதுரமுரளி தெய்வீக மாத இதழ் ஆரம்பித்து எட்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. சந்தாதாரர்கள் மதுரமுரளிக்கான சந்தாவை உடனே அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மதுரமுரளி மாத இதழுக்கான தங்களுடைய சந்தா எண் இந்த மாத மதுரமுரளி envelop மீது ஒட்டப்பட்டுள்ள address labelல் இரண்டாம் வரியில் உள்ளது. உதாரணத்திற்கு ஒரு சந்தா எண்ணைப் பார்ப்போம்.

சந்தா எண் : 2003061234

10 எண்கள் கொண்ட இந்த சந்தா எண்ணில் முதல் 4 எண்கள் சந்தா முடிவடையும் வருடத்தையும் அடுத்த 2 எண்கள் சந்தா முடிவடையும் மாதத்தையும் கடைசீ 4 எண்கள் சந்தா எண்ணையும் குறிக்கும். அதாவது 200306 என்பது ஜூன் 2003 உடன் சந்தா முடிவடைந்து உள்ளது என்பதாகும். அவர்கள் உடனே சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவேண்டும். கடைசீ 4 எண்கள் ''1234'' என்பது அவருடைய சந்தா எண். இதே போல் அவரவர்களுக்கான சந்தா எண்ணை குறித்துக்கொள்ளவும். மதுரமுரளிக்கான சந்தா அனுப்பும்பொழுதும், முகவரி மாற்றம் செய்யும்பொழுதும் சந்தா எண்ணை கட்டாயம் எழுதி அனுப்ப வேண்டும்.

# பக்தர்களின் கவனத்திற்கு!

நமது **மதுரபுரி ஆஸ்ரம வளாகத்திற்குள்** தியானகூடமோ, தெய்வ பிரதிஷ்டையோ, அதிஷ்டானமோ எதுவும் கிடையாது. ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, ஆஸ்ரமத்தில் தங்கியிருக்கும் காலங்களில், **மாதுரிஸகி ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனுக்கு பூஜையும் ஸத்ஸங்கமும்** நடைபெறும். ஆஸ்ரம வளாகத்திற்குள் **யஜுர், ஸாம வேதபாடசாலை** நடந்து வருகின்றது. சுமார் அறுபது வித்யார்த்திகள் வேதம் பயின்று வருகிறார்கள். ஆஸ்ரமத்தில், கைங்கர்யம் செய்து வருபவர்களும் அவர்களுடன் தங்கியுள்ளார்கள். வேதம் பயிலும் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தில், **ஸ்ரீ ஸ்வாமிஜி ஆஸ்ரமத்தில் தங்கியிருக்கும்பொழுது மட்டுமே பக்தர்கள் காலை 9 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 6 மணி வரையிலும்** தரிசனத்திற்கு ஆஸ்ரமத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

ஆஸ்ரம வளாகத்திற்கு பக்கத்திலேயே ஸ்ரீ ஸ்வாமிஜியால் **ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் ஆலயம்** நிர்மாணிக்கப்பட்டு நித்ய ஆராதனைகள் நடந்து வருகின்றது. தினமும், **காலை 6.30 மணி முதல் 11.30 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் 8 மணி வரையிலும்** கோவில் திறந்திருக்கும். பக்தர்கள் இந்த நேரத்திற்குள் எப்பொழுதும் பெருமாளை ஸேவிக்கலாம்.

சென்னை K.K. நகரில் (ஜாபர்கான்பேட்டை) பிரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி இருக்கும் சமயத்தில் அவரை **காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும் மாலை 5.30 மணி முதல் 8.30 மணி வரையிலும்** தரிசனம் செய்யலாம். ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யும்பொழுது அவரிடமிருந்து **பகவந்நாம உபதேசம்** பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு மாதமும் **மதுரமுரளி** இதழில் ஸ்ரீ ஸ்வாமிஜி, அந்த மாதத்தில் எங்கு இருப்பார் என்ற விவரம் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டுவிடும். இதைத்தவிர, மற்ற நேரங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யவேண்டும் என்றால் **முன் அனுமதி** பெற்றுக்கொண்டு தரிசிக்கலாம்.

கடிதங்களை நமது நிர்வாக அலுவலகத்திற்கு "Personal Secretary to H.H. Sri Sri Muralidhara Swamiji" என்று அனுப்ப வேண்டும். கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி கீழே தரப்பட்டு உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜியின் உதவியாளருக்கே கடிதங்களை அனுப்ப வேண்டும். அவர் ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் தெரிவிக்க வேண்டிய செய்திகளைத் தெரிவிப்பார். நமது மிஷனிற்கு E-mail address உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தனிப்பட்ட E-mail address கிடையாது.

**கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**


**"**Personal Secretary to **H.H. Sri Sri Muralidhara Swamiji"**
**Guruji Sri Muralidhara Swamigal Mission**
Premika Bhavanam, New No.2, (Old No.24),
Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083.
E-mail : contact@madhuramurali.org



ஸ்ரீ ஹரி:

## எமது வெளியீடுகள்

**நூல்கள்**

1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள்
2. ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் அமுத உரைகள் | Cassettes, VCDs |
| 2. | திருப்பாவை | Cassettes, Audio CDs |
| 3. | பகவான் ரமணரின் அக்ஷரமணமாலை | Cassettes, Audio CDs |
| 4. | பகவான் ரமணரின் உபதேச உந்தியார் | Cassettes, Audio CDs |
| 5. | Greatness of Bhagavan Ramana | Cassettes, Audio CD |

**கீர்த்தனங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. | மஹாமந்திரம்-அகண்ட கீர்த்தனம் | Cassete, Audio CD |

மிஷன் வெளியீடுகள் அனைத்தும் பிரேமிகபவனத்தில் கிடைக்கும்.